# வார்த்தையை வாசிக்க நிறைய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

24. **பரிசுத்த ஆவியானவர் வார்த்தையைக்கொண்டு போஷிப்பிக்கிறார் என்று உங்களுக்குத் தெரியும்.** "மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று இயேசு சொல்லியிருக்கிறார். அதுதான் இன்றைக்குள்ள காரியமாகும், அந்தக் காரியங்களில் ஒன்று அதுதான், அதுதான் இன்று சபையை அதன் இரத்த சோகையான நிலையில் ஆக்குகிறது, அதற்குக் காரணம் என்னவென்றால், **சபையானது வார்த்தையைக் கொண்டு போஷிக்க நேரம் எடுப்பதில்லை.** (எனவே) **சபையானது பசியாயிருக்கிறது.**

25. நான் ஒரு மருத்துவராக இருந்து, மகத்தான பெரிய கட்டுடல் வாய்ந்தவனாகத் தோற்றமளிக்கும் ஒரு மனிதன் என்னிடம் வந்து, "ஐயா, நான் வியாதியாயிருக்கிறேன்" என்று கூறினால்.

நான், "உங்களுக்கு என்ன அறிகுறிகள் உள்ளன?" என்று கேட்கிறேன்.

அவனோ, "நான் மிகவும் பலவீனமாயிருக்கிறேன், என்னுடைய கைகளை மேலே தூக்குவதே கஷ்டமாக உள்ளது" என்று கூறுகிறார்.

நல்லது, நான்... என்று கூறியிருப்பேன், ஒருசில சரீர சம்பந்தமான நிலைமைகளைக் குறித்து அவனிடம் கேட்டிருப்பேன்.

"ஆமாம், அதெல்லாம் சரியாகவே உள்ளது."

அதற்கு நான், "நல்லது, ஐயா, நீர் ஒழுங்காக சாப்பிட்டு வருகிறீரா?" என்று கேட்டிருப்பேன்.

"ஓ," அவன், "நேற்றைக்கு முந்தின நாள், நான் பாதி மெல்லிய கரகரவென்றிருக்கும் பிஸ்கட்டில் பாதி சாப்பிட்டேன்" என்று சொல்லியிருப்பான்.

நல்லது, நான், "நீர் வெறுமனே பசியாயிருக்கிறீர். உமக்கு சக்தி தேவைப்படுகிறது, நீர் சாப்பிடுவது அவசியமாயிருக்கிறது" என்று கூறியிருப்பேன்.

26. அதுதான் சபையோடுள்ள காரியமாகும்: வெறுமனே ஒரு வேதவசனத்தை வாசிப்பது, ஞாயிற்றுக்கிழமை காலையில் ஒரு சிறு வசனத்தை வாசிப்பது. **நாம் பிழைக்க வேண்டுமானால், நாம் ஒவ்வொரு நிமிடமும் அவருடைய வார்த்தையில் முதலிடத்தைக் கொண்டிருக்க வேண்டும்! நிறைய நேரம் எடுத்து, வார்த்தையை வாசிக்கும்படியாக மற்ற காரியங்களை நிறுத்தி ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்து விடுங்கள். "மனுஷன்**

**அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.**”

*செய்தி:* **தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார்**, மார்ச் 28, 1958

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*